UNOFFICIAL PUBLIC

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.12/2020 |
| Prosecution Witness | : | அ.சா.1 |
| Name | : | **இப்ராகீம்** |
| Father's/Husband Name: | : | அக்பர் பாஷா |
| Address : | : | 265 ஏ, ஆசியா நகர், மேட்டுத்தெரு, வடக்கு மாதவி ரோடு, பெரம்பலூர். |
| Age | : | 31/2022 |

**தேதி: 02/03/2022**

**முதல் விசாரணை :** சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் JAI ஏஜென்சீஸ் என்ற பெயரில் பாரத் பெட்ரோலிய கேஸ்களை சப்ளை செய்யும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. 13/08/2017 அன்று எங்களது உறவினரின் வீட்டின் கிரகபிரவேசம் அரும்பாவூரில் இருந்தது அதனால் என் குடும்பத்தினர் அங்கு சென்றனர். ஆனால் நான் எனது வீட்டில் தான் இருந்தேன். மாலை 5 – 6 மணியளவில் நான் நடைபயிற்சி செய்வதற்காக கலெக்டர் ஆபீஸ் சாலைக்கு சென்றுவிட்டு எனது நண்பர்களுடன் பேசிவிட்டு, எனது குடும்பத்தில் வந்தவர்களையும் அழைத்துக் கொண்டு இரவு 9.00 மணியளவில் வீட்டிற்கு சென்ற போது, எனது வீட்டின் கதவு பூட்டிய மாதிரி தான் இருந்தது. ஆனால் வீட்டிற்குள் சென்று பார்த்த போது, பீரோவின் கதவு உடைக்கப்பட்டு பொருட்கள்

அனைத்தும் சிதறி கிடந்தது. நான் ரூ.2,60,000/-த்தையும், நகைகள் கருகமணி செயின் - 5 பவுன், சாதா செயின் 3 பவுன், தோடு மற்றும் மாட்டல் -2 பவுன், வேறொரு சுற்ற மாட்டல் 1 1/2 பவுன் மற்றும் சங்கு மோதிரம் 1 3/4 பவுன், 4 சிறிய மோதிரங்களின் மொத்த எடை 1 1/2 பவுன், வெள்ளி சாவி கொத்து-1 மற்றும் கொலுசு 6 ஜோடிகள் காணாமல் போயிருந்தது. அதனால் அன்றைய தினம் இரவே நான் காவல் துறையில் புகார் கொடுத்தேன். எனது புகாரின் அடிப்படையில் வந்து பார்வையிட்டு, மறுநாள் எழுத்து மூலமான புகாரை பெற்றனர். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அது **அ.த.சா.ஆ.1.** கொஞ்சம் நாள் கழித்து எதிரியை பிடித்துவிட்டதாகவும், ஆனால் ரூ.1,00,000/- கைப்பற்ற முடிந்ததாகவும் கூறினார்கள். அந்த ரூ.1,00,000/- த்தை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தொகையை தான் திரும்ப பெற்றுள்ளேன். அது **சா.பொ.1.** இது சம்மந்தமாக காவல் துறையினர் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை :**

நீதிமன்ற விசாரணையில் கூறிய விபரங்களை தான் எனது புகாரிலும், காவல்துறையினர் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியும். நான் அந்த புகாரை எழுதவில்லை. எனது நண்பர் எழுதினார். காவல் நிலையத்தில் சுமார் 10.00 மணிக்கு நான் தகவல் கொடுத்திருப்பேன். நான் தகவல் கொடுத்த 15 நிமிடத்தில் காவல்துறையினர் வந்துவிட்டனர். கைரேகை நிபுணர் 2 நாட்கள் கழித்து வந்தனர். மோப்ப நாய்

வந்தது என்று நினைவில்லை. மறுநாள் நான் புகார் கொடுத்தேன். ஆனால் அதை மாற்றி எழுதும்படி கூறினார்கள். ஆனால் எத்தனை மணிக்கு கொடுத்தேன் என சரியாக நினைவில்லை. காவல்துறையினர் சம்பவத்திற்கு மறுநாள் விசாரித்தார்கள். அப்போது பிற நபர்களையும் விசாரித்தார் என்றால் சரிதான். ரூ.2,60,000/- காணாமல் சென்றதாக புகார் கொடுத்தேன். அந்த நோட்டின் வகை குறித்தோ அல்லது அதன் எண்கள் குறித்தோ கூறவில்லை. எந்த அதிகாரி என்னை விசாரித்தார் என்றால் காவல் உதவி ஆய்வாளர் விசாரித்தார். எனது வீட்டில் இருந்து நகைகளும், பணமும் காணாமல் சென்றதாக நான் புகார் கொடுத்தேன். பணம் மட்டும் தான் காணாமல் சென்றது எனவும், நகைகள் காணாமல் செல்லவில்லை எனவும் காவல்துறையினர் கூறியிருந்தால் அது தவறு. உண்மையிலேயே எனது வீட்டில் இருந்து நகையோ, பணமோ காணாமல் சென்ற என்றாலும், காவல் துறையினர் கேட்டதற்கிணங்க நான் பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றாலும், அதன் அடிப்படையில் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

***Sd/-***
Judicial Magistrate No.I,
Perambalur.

JMNO.I.PBLR